Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Way of the life of Women during the Sangam Period

**Dr. N. Sivaguru**, Associate Professor of Tamil, Thiruvalluvar University, Vellore - 632115, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-9425-1078
DOI: 10.5281/zenodo.14744740

## Abstract

*The lifestyle of the Tamils was a model among world civilizations. In particular, people in Tamil society had learned to respect each other and live together. They respected each other's feelings and helped them when they realized their needs. Women in the society were educated at Sangam times. This can be seen from the fact that 40 women poets sang Sangam songs. Women of the Sangam period were known to express their desires and feelings naturally in the poems. It can be said that they had an equal situation with men in the social structure. They used their boundaries throughout the territory they lived in. They had a situation where they did not hesitate to express their needs and feelings. In this way, this article examines the status of women in the Sangam period. It can be seen that the status of Sangam women had improved in many ways, such as their clothing, appearance, internal life, external life and the life of royal women. Hence, the status of women in the Sangam people's lifestyle has been deciphered in the article.*

**Keywords:** Lifestyle, Women, Sentiments, Social Structure, Tamil Culture.

## References

[1] Su. Vidyanandhan. *Tamil Salbu*. Kumaran Book House, Colombo, 2006.
[2] *Sangam Literature Perumpanathruppadai*. Kovilur Math, 2022.
[3] *Sangam Literature Porunaratuppadai.* Kovilur Math, 2022.
[4] *Sangam Literature Kurunthogai*. Kovilur Math, 2022.
[5] *Sangam Literature Purananooru*. Kovilur Math, 2022.
[6] *Sangam Literature Akananooru*. Kovilur Math, 2022.
[7] *Sangam Literature Maduraikkanchi*. Kovilur Math, 2022.
[8] *Sangam Literature Sirupanatruppadai*. Kovilur Math, 2022.
[9] *Sangam Literature Mullaipattu*. Kovilur Math, 2022.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# சங்க கால மகளிர் வாழ்வியல் நிலை

**முனைவர் நா. சிவகுரு**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் - 632115, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9425-1078
DOI: 10.5281/zenodo.14744740

**ஆய்வுச்சுருக்கம்**

*உலக நாகரிகங்களில் தோற்றமாக தமிழர்களின் வாழ்வியல் இருந்தது. அதிலும் சமூகத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ கற்று இருந்தனர். ஒருவர் மற்றொருவரின் உணர்வு மதிப்பளித்து, தேவையை உணர்த்துகிறது அவர்களுக்கு உதவி செய்து வந்தனர். சமூகத்தில் பெண்கள் கல்வி கற்று இருந்தனர். இதற்குச் சான்று 40 வெண்பாற் புலவர்கள் சங்கப் பாடல்களை பாடி இருப்பதால் அறியலாம். சங்க கால மகளிர் தங்களின் விருப்பங்களை, உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்துபவர்களாக விளங்கினர். தங்களின் உடைகளை, உணர்வுகளை ஆண்களுக்கு நிகராக பயன்படுத்தி வந்தனர். சமூக கட்டமைப்பில் ஆண்களுக்கு சமமான ஒரு சூழ்நிலை அவர்களுக்கு இருந்தது எனலாம். தங்களின் எல்லையை தாங்கள் வாழும் நிலப்பரப்பு முழுவதிலும் பயன்படுத்தி உள்ளனர். தங்களின் தேவையை உணர்வை வெளிப்படுத்த தயங்காத சூழ்நிலை அவர்களிடம் இருந்தது. அந்த வகையில் சங்க கால மகளிர் நிலை குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. தங்களின் உடை அமைப்பு, தோற்றப்பொலிவு, அக வாழ்க்கை, புற வாழ்க்கை, அரச மகளிர் அவர்களுக்கான வாழ்க்கை என பல வகையிலும் சங்க மகளிர் நிலை மேம்பட்டு இருந்ததை அறியலாம். இதன் அடிப்படையில் சங்க மக்களின் வாழ்வியலில் மகளிர் நிலை குறித்து இது கட்டுரையில் காணலாம்.*

**திறவுச் சொற்கள்:** வாழ்க்கை முறை, பெண்கள், உணர்வுகள், சமூக அமைப்பு, தமிழ்ப் பண்பாடு.

**முன்னுரை**

உலக நாகரிகங்களில் தோற்றமாக தமிழர்களின் வாழ்வியல் இருந்தது. அதிலும் சமூகத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ கற்று இருந்தனர். ஒருவர் மற்றொருவரின் உணர்வு மதிப்பளித்து, தேவையை உணர்த்துகிறது அவர்களுக்கு உதவி செய்து வந்தனர். சமூகத்தில் பெண்கள் கல்வி கற்று இருந்தனர். இதற்குச் சான்று 40 வெண்பாற் புலவர்கள் சங்கப் பாடல்களை பாடி இருப்பதால் அறியலாம். சங்க கால மகளிர் தங்களின் விருப்பங்களை, உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்துபவர்களாக விளங்கினர். தங்களின் உடைகளை, உணர்வுகளை ஆண்களுக்கு நிகராக பயன்படுத்தி வந்தனர். சமூக கட்டமைப்பில் ஆண்களுக்கு சமமான ஒரு சூழ்நிலை அவர்களுக்கு இருந்தது எனலாம். தங்களின் எல்லையை

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

தாங்கள் வாழும் நிலப்பரப்பு முழுவதிலும் பயன்படுத்தி உள்ளனர். தங்களின் தேவையை உணர்வை வெளிப்படுத்த தயங்காத சூழ்நிலை அவர்களிடம் இருந்தது. அந்த வகையில் சங்க கால மகளிர் நிலை குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. தங்களின் உடை அமைப்பு, தோற்றப்பொலிவு, அக வாழ்க்கை, புற வாழ்க்கை, அரச மகளிர் அவர்களுக்கான வாழ்க்கை என பல வகையிலும் சங்க மகளிர் நிலை மேம்பட்டு இருந்ததை அறியலாம். இதன் அடிப்படையில் சங்க மக்களின் வாழ்வியலில் மகளிர் நிலை குறித்து இது கட்டுரையில் காணலாம்.

**சமூகத்தில் பெண்கள் நிலை**

சமூகத்தில் பெண்கள் மிகச்சிறந்த இடத்தை பெற்றிருந்தனர். சங்க காலத்திற்கு பின்பு இவர்களுடைய மதிப்பு குறைய தொடங்கியது எனலாம். சங்க இலக்கியங்களில் பெண்கள் விழாவில் சுதந்திரமாக பங்கேற்றனர் மற்றும் கணவருடன் அமர்ந்து கள் அருந்தி மகிழ்ந்தனர் என்பதை, பட்டினப்பாலை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இதனை,

**துணைப் புணர்ந்த மடமங்கையர்**
**பட்டு நீக்கித் துகிலுடுத்தும்**
**மட்டுநீக்கி மதுமிகிழ்ந்தும் (பட்டினப்பாலை. 106-108)**

பட்டினப்பாலை நமக்கு உணர்த்துகிறது.

கள் அருந்துவதினால் அவர்களுடைய கண்கள் குளிர்ச்சி பொருந்தியதாய் இருந்தது என்பதை பெரும்பாணாற்றுப்படை உணர்த்துகிறது.

இதனை,

**நறவுபெயர்த்தமைத்த நல்லெழின் மழைக்கண்**
**மடவரன் மகளிரொடு பகல்விளை யாடி (பெரும்பாண்., 386-387)**

என்பதால் அறியலாம். பெண்களுக்கு இருக்க வேண்டிய மடம், நாணம், அச்சம் முதலிய பண்புகளைப் பற்றி பல நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. முல்லை போன்ற பற்களை உடைய மகளிர் சிறப்பை சிறுபானாற்றுப்படையில் காணலாம்.து முல்லை கற்பின் அடையாளம் ஆகும். அருந்ததியின் கற்புப்பெண்களுக்கு இருக்கக்கூடிய கற்பின் தன்மையை எடுத்துக்காட்டுவதாக விளங்கியது. கணவனுக்கு துணையாக அவர்களுடைய வேலைகளை செய்வதற்கு பக்க பலமாக பெண்கள் இருந்துள்ளனர் என்பதை சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.

**பெண்களின் பல்வேறு வாழ்வியல் முறை**

சங்க கால பெண்கள் தங்கள் வாழ்வியல் முறையை பலவிதமாக பிரித்து வாழ்ந்து வந்துள்ளனர். களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என்று வகைப்படுத்தி வாழ்ந்து வந்துள்ளனர். களவு கால வாழ்க்கையில் தங்களின் அக வாழ்க்கை யாரோடு அமைய வேண்டும் என்பதை முடிவு செய்யும் முக்கிய நிலையில் இருந்துள்ளனர் மேலும் கற்பு கால வாழ்க்கை எப்படி இருக்க

வேண்டும் என்பதை முடிவு செய்ய கூடியவராக பெண்கள் இருந்துள்ளனர் என்பதை சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன இல்லற மகளிர் இரு மாய்ந்து கதிர் விரிகின்ற விடியற்காலத்தில் இல்லறத்திற்கு செய்ய வேண்டியவற்றை விரும்பி செய்தனர் என மதுரைக்காஞ்சி எடுத்துக்காட்டுகிறது. இதனை, **புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி (மதுரைக்காஞ்சி - 664)** என்பதால் அறியலாம்.

பெண்கள் பாசறையில் வினை ஏற்றதிலும் பெரும்பாலும் போர்த் தலைவருக்கு பணிப்பெண்களாகவும் விளக்கேற்றுபவராகவும் இருந்துள்ளனர். பாசறையில் கொடி அணிந்த முன் கையினை உடைய பெண்கள் இருந்துள்ளனர். அவர்கள் கைகளில் ஈட்டியை வைத்திருந்தனர். பெண்கள் கைகளில் விளக்கினை ஏற்றினர். மங்கலாக எரியும் விளக்குகளை தூண்டி விட்டனர் என முல்லைப்பாட்டு கூறுகிறது.

இதனை,

**குறுந்தொடி முன்கைக் கூந்தலங் சிறுபுறத்து**
**இரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்**
**விரிவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்**
**நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்**
**கையமை விளக்க நந்துதொறு மாட்ட. (முல்லைப்பாட்டு. 45-49)**

என்பதால் அறியலாம்.

**பொழுதுபோக்கு**

மகளிர் ஈடுபடும் பல விளையாட்டுகளை சங்கநூல்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அதிலும் குறிப்பாக புனல் விளையாட்டு பெரு வழக்கில் உள்ளது. இதனை, சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. வண்டல் மண்ணில் விளையாடும் இள மகளிர் பற்றி பொருநர் ஆற்றுப்படை விளக்குகிறது. இதனை, "**இளையோர் வண்ட லயரவும்" (பொருந., 311)** என்பதால் அறியலாம். மணல் பரந்த முனறில்களில் விளையாடும் கழங்கு மகளிரின் மற்றும் ஒரு விளையாட்டாக அமைந்துள்ளது. இதில் பெண்கள் சிறு உருண்டையான கற்களை மேலே எரிந்து புறங்கைகளில் பிடித்து விளையாடுவர். இதை பெரும்பாணாற்றுப்படை எடுத்துக்காட்டுகிறது. இதனை,

**கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய**
**முத்த வார்மணற்பொற்கழங் காடும் (பெரும்பாண்., 334-335)**

என்பதால் அறியலாம்.

ஆடை அணிகலன்கள் மகளிர் பொதுவாக நம் கூந்தலை நீளமாக வளர்த்தனர். அதனை அவர்கள் நெய் பூசி பின்னலாக அல்லது வாரி கொண்டையாக முடிப்பர். ஐந்து விதமாக கூந்தலை சமைக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. ஐம்பால் என்னும் சொல்லாட்சி இதனை நமக்கு உணர்த்துகிறது. அசையும் இயல்பினை உடைய ஐம்பால் மயிரினையுடைய

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


உப்பு வணிகத்திய என சிறுபாணற்றுப்படை எடுத்துக்காட்டுகிறது. இதனை, **"உளரியல் ஐம்பாலுமட்டிய ரீன்ற" (சிறுபாண்., 60)** விளக்குகிறது

ஐம்பால் என்பதை குழல்,அளகம்,கொண்டை, பனிச்சை,துஞ்சை என்பன என்று நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையில் எடுத்துக்காட்டுகின்றார். முதிய பெண்கள் வாரி விடப்பட்ட கூந்தலை முடித்துக் கட்டி இருந்தனர் எனமதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. இள மகளிர் பெரும்பாலும் கூந்தலை கீழே தொங்கவிட்டு இருந்தனர் இதனை *சிறுபாணாற்றுப்படை* எடுத்துக் கூறுகிறது. பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்வதில் சிறந்த விளங்கினர். அவர்கள் மனம் மிக்க வாசனை திரவியங்களை பயன்படுத்தி வந்தனர்.அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தி வந்ததை மதுரைக்காஞ்சி விளங்குகிறது. இதனை,

**பூந்தொடி மகளிர்**
**மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ (மதுரைக்காஞ்சி. 446-447)**

என்பதால் அறியலாம். பொன், வெள்ளி, மணி, பவளம், சங்கு, முத்து முதலியவற்றால் செய்த அணிகலன்களை அக்காலப் பெண்கள் அணிந்தனர். விழாக் கண்டு களிக்கும் மகளிர், ஒலிக்கும் மணிகள் பொருந்திய பொற்சிலம்புகளை அணிந்தனர். வளையல்கள் சித்திரவேலைப்பாடு மிக்கதாக இருந்தது. இதனை,

**நாண்மிகி ழிருக்கை காண்மார் பூணொடு**
**தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்**
**றாவற விளங்கிய வாய்பொ னவிரிழை**
**அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர் (மதுரைக்காஞ்சி. 443-446)**

என்பதால் அறியலாம்.

**களவுக்காலம்**

தலைவி தலைவன் மீது பேரன்பு கொண்டவளாகக் காணப்படுகின்றாள். தலைவன் மீதுகொண்ட அன்பினை எல்லையிட்டுக்கூற முடியாது என்று குறுந்தொகைப்பாடல் விளக்குகிறது. இதனை,

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்றே**
**நீரினும் ஆரளவின்றே கருங்கோட் குறிஞ்சிப்பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்தொகை)**

என்பதால் அறியலாம்.

சமூக அமைப்பினை பற்றிய தொகுதியில் நில இயற்கைக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் நிறைய தொடர்பைக் காணலாம். பழந்தமிழர் மரபிலே காதல் உறவு நிலத்தின் இயற்கைக்கு ஏற்ப அமைந்திருந்தது எனலாம். திருமணத்திற்கு முந்திய காதல் உறவு குறிஞ்சி நிலத்தோடு தொடர்புடையதாக இருந்தது. பிரிவு கால அளவையால் முல்லை, நெய்தல், பாலை எனும்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

நிலங்களோடு தொடர்பு படுத்தப்பட்டது. இல்லறக் காதல் மருதத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. முல்லை நிலத்தில் பிரிவு சிறிது காலத்துக்கு தான் நிகழும். அங்கு பசுக்களை மேய்ப்பதற்கும் வேட்டையாடுவதற்கும் தலைவன் தலைவியை விட்டு பிரிவான்.தலைவி தலைவன் வரும் வரை காத்திருப்பாள். நெய்தல் நிலத்தில் பிரிவு சிறிது நீண்ட காலத்திற்கு நிகழும். கடல் மேல் செல்லும் பரதவர் திரும்பி வர காலம் சிறிது நீண்டிருக்கும்.

**திருமணம்**

வரைவுகடாவுதல் முதலான நிகழ்வுகள் நிகழ்ந்த பின்னர் திருமணம் நடைபெறும். பழந்தமிழரின் மணவினை பிற்கால மணவினைகளில் இருந்து வேறுபட்டது. அகநானூறு 86 ஆம் பாடல் திருமண நிகழ்வுகளை விளக்கமாக எடுத்துக் கூறுகிறது. உழுத்தம் பருப்புடன் கூடி சமைத்த பொங்கல்ளோடு பெரிய சோற்றுத்திரள் ஆக்கி வைத்திருந்தனர். மரத்தூண்கள் நிறுத்தி செய்த அழகிய பந்தலின் கீழ் புதுமணல் பரப்பி மன வினைகளை நிகழ்த்தினார். கற்பின் வழாது பல பேறுகளையும் பெற்று உன்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையவையாக என்று நீர் தெளிக்கப்பட்ட குளிர்ந்த இதழ்களை உடைய, பூக்களை கரிய கூந்தலில் நெல்லுடன் தூவி மக்களை வாழ்த்தினர். இந்த வினைகள் யாவும் முடிந்த பின்னர் சுற்றத்தார் சிறந்த இல்லற கிழத்தியாக விளங்குவாய் என கூறி, பெண்ணை உரியவனிடம் கொடுத்தனர்.

இதனை,

**உழுந்துதலைப்பெய்த கொழுங்களி மதிவை**
**... பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
**வதுவை நன்மணம் கழந்த பின்றைக்**
**கல்லென் கமமையர்ஞெரேரெனப் புகுதந்து**
**பேரிற்கித்தியாகெனத் தமர்தர (அகம்., 86: 1-19)**

என்பதால் அறியலாம்

**இல்லற வாழ்க்கை**

திருமணம் நடைபெற்ற பின் ஆண் – பெண் இணைந்து இல்லற வாழ்க்கை நடத்துவர். இல்லறத்தில் பெண் மாட்சிமை உடையவள் ஆவாள். சங்க இலக்கியங்கள் காட்டும் பெண் ஆணிற்குச் சமமானவள். சூரியன் எப்பக்கம் இயங்குகின்றதோ அதே பக்கமாக நெருஞ்சிப்பூவும் திரும்பித் திரும்பி நிற்கும். அவ்வாறே இல்லாளும் கணவன் முகம் நோக்கி இருப்பாள். இதனை,

**எழுதரு மதியம் கடற்கண் டாங்கு**
**கொழுகுவெள்ளருவி யோங்கு மலைநாடன்**
**ஞாயி றனையன் றோழி**
**நெருஞ்சி யனையவென் பெரும்பணைத்தோளே (குறுந்தொகை. 315)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்பதால் உணரலாம்.

மனைவி தன் கணவனுக்கு தயிர்க்குழம்பு ஆக்குகின்றாள். தயிர் முதிர்ந்து இருக்கிறது. அதனை தன் கைவிரல்களில் பிசைந்து உணவு தயாரிக்கின்றாள். இதனை,

**முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளையுண் கண் குய்ப்புகை கமழத்**
**தான்றுழுந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவனுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே. (குறுந்தொகை. 167)**

என்பதன் மூலம் அறியாலம்.

இல்லறத்தின் சிறப்பு நன்மக்கட்பேறு ஆகும். மக்கட்பேற்றின் சிறப்புபற்றி புறநானூறு மிகத்தெளிவாக விளக்குகின்றது. இதனை,

**படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வராயினுமிடைப் படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்**
**நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை யில்லோர்க்குப்**
**பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே (புறம்., 188)**

எனும் பாடல் விளக்குகின்றது.

**முடிவுரை**

சங்க கால பெண்கள் ஆண்களுக்குநிகரானவர்களாக கல்வி கேள்விகளில் நிறைந்து வாழ்ந்தனர். சங்க பெண்பாற்புலவர்கள் 40 பேர் இருப்பதைக் கொண்டு இதனை நாம் அறிந்து கொள்ளலாம். பெண்கள் தங்கள் வாழ்வியலைமிகத் தெளிவாக பகுத்து வாழ்ந்து வந்துள்ளனர். மிகப்பெரிய தொலைநோக்குப்பார்வையோடுவாழ்வை புரிந்து எதார்த்தத்தை உணர்ந்து சங்க கால பெண்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தங்கள் வாழ்க்கை முறையினை திருமணத்திற்கு முன் திருமணத்திற்கு பின் என பகுத்து களவு கால வாழ்க்கையை கற்புக்காலவாழ்க்கையாக மாற்றி வாழ்ந்து வந்துள்ளனர். களவு ஒழுக்கத்திற்குரியதன்மையோடு எல்லை மீறாது தம்முடைய வாழ்க்கை முறையை அமைத்து வாழ்ந்து வந்ததை அறிய முடிகிறது. மேலும் இவர்கள் களவு காலத்தில் கடைபிடிக்கக் கூடிய நடைமுறைகளை தெரிந்து அதன் அடிப்படையில் வாழ்ந்ததை அறிய முடிகிறது. களவு கற்பாக மாறுகின்றது. அதற்கு வரைவு கடாதல் என்ற ஒரு துறை மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. சங்க பாடல்களில் பல பாடல்கள் வரைவு கடாதல் பற்றி விளக்கிக் கூறுகின்றன. சங்க கால சமூகத்தில் பெண்கள் அணிந்திருக்கக் கூடிய ஆடை

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

அணிகலன்கள், சமூகத்தில் பெண்கள் நிலை, அவர்களுடைய பொழுதுபோக்கு ஆகியன இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருமணமான ஆணும் பெண்ணும் இணைந்து நடத்தக்கூடிய வாழ்க்கை முறை இல்லறம் என்று பெயர். அந்த இல்லற நிகழ்வில் ஆண் பெண்ணைச் சார்ந்து எப்படி இருக்க வேண்டும் பெண் தன் கணவனுக்காக எப்படி தன் வாழ்வியலைஅமைத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து மிக தெளிவாக சங்க பாடல்கள் உணர்த்துவதை அறிய முடிகிறது. இல்லற வாழ்வின் நல்லறமாக கருதப்படுவது நன்மக்கள் பேறு. அந்த நல்ல மக்கள் பேறு பற்றி புறநானூறு எடுத்துக்காட்டக் கூடிய பாடல் குழந்தை பேறு இல்லாதவர்களுக்கு இருக்கக்கூடிய மன வருத்தத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த வகையில் சங்க கால பெண்களின் வாழ்வியல் ஆனது ஒரு வரையறுக்கப்பட்ட வாழ்வியலாக அமைந்துள்ளது அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] சு. வித்யானந்தன். *தமிழர் சால்பு*. குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2006
[2] *சங்க இலக்கியம் பெரும்பாணாற்றுப்படை*. கோவிலூர் மடம், 2022.
[3] *சங்க இலக்கியம் பொருநராற்றுப்படை*. கோவிலூர் மடம், 2022.
[4] *சங்க இலக்கியம் குறுந்தொகை*. கோவிலூர் மடம், 2022.
[5] *சங்க இலக்கியம் புறநானூறு*. கோவிலூர் மடம், 2022.
[6] *சங்க இலக்கியம் அகநானூறு*. கோவிலூர் மடம், 2022.
[7] *சங்க இலக்கியம் மதுரைக்காஞ்சி*. கோவிலூர் மடம், 2022.
[8] *சங்க இலக்கியம் சிறுபாணாற்றுப்படை*. கோவிலூர் மடம், 2022.
[9] *சங்க இலக்கியம் முல்லைப்பாட்டு*. கோவிலூர் மடம், 2022.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.